
www.padippakam.com

# கலாச்சாரம்

குரல் 1 1988



## தமிழர் கலை கலாச்சார அவை-பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

...அட்டையில்). ....

காலம் காலமாய்
ஆதிக்கங்கள்......
அராஜகங்கள், ....
அடக்கு முறைகள்...
இந்த
அந்நியப் பாதங்களில்
அழுந்திக் கொண்டிருக்கிறது
ஈழத்தின் தலை விதி!

வளைந்து வளைந்து
எங்கள்
முதுகெலும் பெல்லாம்
இற்றுப் போனதால்
நரம்பு வேர்கள்
தாகம் கொண்டது
சுதந்திரம் வேண்டி!

ஏகாதிபத்தியங்களின்,
ஏகபோக மாளிகை
மயக்க போதையில்
அரசியல் தலைவர்களின்
உணர்ச்சி வசனங்களால்
எம் மக்கள்
தலை அறுந்து .....
உடல் சரிந்து ......
உயிர் பிரிந்து..........

ஆண்டுக் கொருதரம்
முகூர்த்தம் குறித்துக் கொண்டன
கலவரங்கள்!

இளம் காற்றுக்கள்
போர் கொடி
தூக்கையில்
இலவம் பஞ்சுகள்
இந்தியாவின் காலடியில்
வீழ்ந்து கிடந்தன.

சிங்கள ஆதிக்கம்
எங்கள்
நெஞ்சிலே உதைத்தது.

காந்தியம் ....
அகிம்சை .....
மனித நேயம் ....
சமாதானம் .....
இந்த
சொற் சித்திரக காரர்கள்
எங்கள்
முதுகுக்குப் பின்னால்
ஈட்டி முனைகளைக்
கூர்பார்த்துக் கொண்டனர்

( தொடர்ச்சி 17 ம் பக்கம் )

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் ஈழ
மண்ணின் விடுதலைக்காய்
தாகம் கொண்டு
நேசித்த மண்ணிலே
கல்லறை ஆனவர்களே....
உங்கள்
உறங்காத கனவுகள்
இலட்சிய நெருப்பாய்
எங்கள்
தேசத்தில் எரிகிறது.
அந்த வேங்கைகளுக்கு.....

படிப்பகம்

www.padippakam.com



# பார்வை...

காலம் காலமாக அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைச் சகதிக்குள் சிக்கி அல்லல்பட்ட ஈழத்து தமிழினம் இன்று தனது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எழுச்சி கொண்டு போராட்டம் நடத்தி வருகின்றது.

ஒரு தேசிய இனம் தனக்கேயுரிய மொழி, நாடு, கல்வி, பொருளாதார, கலை கலாச்சார மற்றும் இன்னோரன்ன தொழில் விஞ்ஞான வளர்ச்சியிலும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் பெற்றுள்ள நிலைப்பாட்டிலேயே அவ்வினத்தின் வளர்ச்சியின் தனித்துவம் அடங்கியுள்ளது.

இவற்றின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட ஒரு இனத்தை ஏகாதிபத்தியங்கள் அடக்கி ஒடுக்கி வருவதும், அவற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வினம் போராட்டம் நடத்துவதும் இன்று மூன்றாம் உலக நாடுகளில் சாதாரண நிகழ்வுகளாகும்.

இன்றைய ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க ஸ்ரீலங்கா இனவாத அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இந்திய ஆக்கிரமிப்பாளர்களும், தமிழீழத்தின் குடியிருப்புகள், வைத்தியசாலைகள், பொருளாதார நிலைகள், கடலோரப் பிரதேசங்கள், காட்டுப் பகுதிகள் மட்டுமின்றி பாடசாலைகள், நூல்நிலையங்கள், ஆலயங்கள் என்பனவற்றை அழிப்பதிலும் கலை, கலாச்சார பண்பாட்டு உறவுகள், ஒழுக்க முறைகளைச் சீரழிப்பதிலும் முனைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு தேசிய இனத்தின் அரசியல் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் இன்றியமையாதது. அதேபோல் அத்தேசிய இனத்தின் கலை கலாச்சாரங்கள் ஆதிக்கங்களின் அடக்குமுறைகளால் சிதைந்து, சின்னாபின்னமாகித் திசைமாறிப் போய்விடாமல்— காப்பாற்றுவதோடு கலாச்சாரப் புரட்சிகளையும் முன்னெடுக்க வேண்டிய அத்தியாவசியமான ஒன்றாகிறது.

இந்த வகையில் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றுவரை கலை, கலாச்சாரங்களில் இந்தியாவையே பின்பற்றி வந்து கொண்டிருக்கின்றோம்.

கலைகளைப் பொறுத்தவரை குறிப்பாக இலக்கியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், திரைப்படங்கள், மாதாந்த சஞ்சிகைகள் என்பனவெல்லாம் உடனுக்குடன் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால், ஈழத்தில் மெல்ல மெல்ல வளர்ந்து வருகின்ற கலைப் படைப்புக்கள் பின்னுக்குத் தள்ளப்படுவதோடு, அவற்றின் வளர்ச்சிப் படிகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களையும் இந்திய படைப்புக்களே நிறைத்து விடுவதால் ஈழத்துக் கலைப் படைப்புகளுக்கு வரவேற்புக் குறைந்து போய் விடுகின்றது.

கலைப் படைப்புக்கள் வெறும்பொழுது போக்கு அம்சங்களைக் கொண்டிருத்தல் தவறானதொன்றாகும். ஒரு சமுதாயத்தின் எண்ணங்களை, இலட்சியங்களை மேம்படுத்தும் யதார்த்தப் படைப்புகளையே நேரிய கலைவடிவங்கள் எனலாம்.

தமிழீழத்தின் இன்றைய கால கட்டத்தில் கலை வடிவங்களை வெறும்பொழுது போக்கு அம்சமாகவும், பொருள் சேர்க்கும் சாதனமாகவும் பயன்படுத்துதல் விடுதலைப் போராட்டத்தைக்கொச்சைப் படுத்துவதாகவே அமையும். இதைச் சிலர் புரிந்து கொள்ளாமைவருந்தத் தக்கது.

முக்கியமாக இன்றைய கால கட்டத்தில் ஏகாதிபத்தியங்களால் திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற கலாச்சாரச் சீரழிவிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற — வேண்டியது ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இந்த வகையில் கவர்ச்சிகரமான வியாபார கலைப் படைப்புக்களை ஒதுக்கி வைத்துவிட்டு எம் மண்ணின் அவலங்களையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அத்தியாவசியத்தையும் கலைவடிவங்களாக மக்களுக்குத் தருவதற்கு அந்நிய தேசங்களை எதிர்பார்த்துக்கொண்டிராமல் நாமே அவற்றை மக்களுக்குத் தர முன்வருவதோடு எம் மண்ணில் இன்று நடைபெறுகின்ற கலாச்சாரச் சீரழிவுக்கு எதிராகவும் போராட வேண்டியது — காலத்தின் கட்டாய தேவையாகும்.

அதன் அடிப்படையில் பிரான்ஸ் — "தமிழர் கலை, கலாச்சார அவையின்" "கலாச்சாரம்" சஞ்சிகையும் ஓர் சிறு கருவியே!

படிப்பகம்


www.padippakam.com








# தமிழர் கலை கலாச்சார அவை.



## பிரான்ஸ்



திட்டமிடப்பட்ட கலை, கலாச்சார சீரழிவுக்கு எதிராக
கிளர்ந்தெழுவோம்...
மறக்கப்படுகின்ற அருங்கலைகளைப் புதுப்பிக்க
பாடுபடுவோம்...
எம் மண்ணின் கலைகளை
வளர்த்தெடுப்போம்...
வடிகால் இல்லாமல் தேங்கிக் கிடக்கும் விடுதலை உணர்வுக்கு
கலை வடிவம் கொடுக்க ஒன்றுபடுவோம்.



தொடர்புகட்கு **57, Rue Bichat**
**75010 Paris**

தொலைபேசி இல. 42.39.58.67

(மாலை 5 மணிக்கும், 10 மணிக்குமிடையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்)

அனைவரின் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. (நாடகம், பாடல், இசை, எழுத்தாற்றல்)

"கலாச்சாரம்" பற்றிய உங்கள் கருத்துக்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற
ஆக்கங்கள் வரவேற்கப்படும்.
(ஆக்கங்களை திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.)

படிப்பகம்

www.padippakam.com

# 4 கருவறை ஆன கல்லறைக்கு

கால வெள்ளத்தில் ஓர் ஆண்டு வேகமாக அடித்துச் செல்லப்பட்டு விட்டது. ஆமாம். திலீபன் மரணத்தை மணந்து ஓர் ஆண்டு மௌனமாக் கரைந்து விட்டது. விடுதலை வேண்டி "புலிகளின்" பாதையில் ஒளிர்ந்த மெழுகுவர்த்தி அணைந்து ஓர் ஆண்டு காணாமல் போய்விட்டது.

தமிழர்கள் சிந்திய குருதியில் சிவந்த அந்தத் தமிழீழத்து மண்ணில், இந்தியஆதிக்கம் காலூன்றி ஓர் ஆண்டு கண்ணீருடனும் செந்நீருடனும் கடந்து போய்விட்டது.

வெட்ட வெட்டத் தழைக்கின்ற புதிய அரக்கர்களாய் இலங்கை இந்திய அடக்குமுறைகள்... அடாவடித் தனங்கள்... ஆக்கிரமிப்புக்கள்......

சளைக்காமல் பதிலடிகொடுக்கின்ற விடுதலைப் புலிகள்... அந்தப் புயல்களின் பாதையில் சுழன்று வீசிய சூறாவளி இந்தத் திலீபன்.

இழப்புக்களால் நொந்துபோன இதயங்களுக்கு வார்த்தை ஒத்தடம் கொடுத்த வைத்தியன்.

தமிழீழத்து மக்களைத் தழுவி வந்த தென்றல். இலங்கை இந்திய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான — அனல் காற்று.

தமிழீழத்தின் தெருக்கள் ஒவ்வொன்றும், ஏன் சிறு மணல் ஒழுங்கைகள் கூடத் திலீபனைத் தெரிந்து வைத்திருந்தன. ஆம்! அவன் பாதம் படாத தரைகளே தமிழீழத்தில் இருக்கவில்லை.

சோர்வுக்கு அவனைத் தீண்டவே பயம். தூக்கத்தை மறந்த அவனுடைய கண்கள் இருட்டையே துளாவிக் கொண்டிருக்கும், தூங்கிக் கொண்டிருப்பவர்களை தட்டிஎழுப்புவதற்காய்.

அவனுடைய ஆழமான, ஆவேசமான கருத்துக்களால் நாணல்கள் கூடத் தலைநிமிர்ந்து வாழத் தலைப்பட்டன.

சிங்கள இனவாத ஆதிக்க மலையைப் புலிகளின் புயல் அடிக்கடிமுட்டியது. அசைத்துப் பார்த்தது. வேரோடு சரிப்பதற்குப் பெருஞ்சமர் புரிந்தது. பீரங்கிவேட்டுக்கள்... துப்பாக்கிச் சூடுகள்... விமானத் தாக்குதல்கள்... இதனால்கூட வீறுகொண்ட இளைஞர்களை வெற்றி கொள்ள இயலவில்லை.

புலிகளை எதிர்கொள்ள முடியாதவர்கள், அப்பாவித் தமிழர்களின்உயிர்களைப் பலி வாங்கினர். உறைவிடங்களை உடைத்தனர். உண்பதற்கு உணவே இல்லை. கண்ணீரும், உதிரமும் தமிழீழ மண்ணையே ஈரப்படுத்திக்கொண்டிருந்தது. மரண ஓலங்கள்... இழப்புக்களின் அவஸ்தைகள்... நோயாளிகளின் முனகல்கள்... மருத்துவம் இன்றி உணவின்றி.. பாதுகாப்பின்றி.. பதுங்கு குழிகளில் பதுங்கிக் கொண்ட சோகங்கள்.. வார்த்தைகளில் படியாத துன்பங்கள்...

எம் மண்ணில் கால் புதைக்கக்காலம் பார்த்திருந்த இந்தியா, காந்தீயத்தின் பிறப்பிடம்... அகிம்சைகளின்— வளர்ப்பிடம்... இரக்கத்தின் இருப்பிடமென்றெல்லாம் கண்ணீர் வடித்துக்கொண்டு ஓடோடி வந்தது.

அவசர உதவியாய் ,உணவுகள்கொடுத்து மக்களின் மனதில் நம்பிக்கைஏற்படுத்த முயற்சி செய்து கொண்டு, இலங்கை இனவாத அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. அமைதியைவிரும்பிய எம்மவர்கள் அமைதிப்படை யிடம் ஆயுதத்தைக் கையளித்தனர்.

மாதம் ஒன்று ஆனபின்பும் இலங்கை, இந்திய ஒப்பந்தச் சரத்துக்கள் நிறைவேற்றப்படாமல் முகூர்த்தம் பார்த்துக் கொண்டிருந்தன. சிங்களக்குடியேற்றங்கள் பின்பும் தொடர்ந்தது. இராணுவ முகாம்கள் அகற்றப்படாமல் நிலை கொண்டிருந்தது. கபடங்களைப் புரிந்து கொண்ட பொது மக்கள் போராட ஆரம்பித்தனர். இந்திய அரசின் கையாலாகாத்தனம் உலகத்துக்குத் தெரிய ஆரம்பித்தது.

(1) சிறைக்கைதிகளை விடுவி.
(2) திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து.
(3) இடைக்கால அரசு நிறுவபடும்வரை சகல புனருத்தாரண வேலைகளையும் நிறுத்து.
(4) புதிதாகப் பொலிஸ்நிலையங்கள் திறக்கப்படக்கூடாது.
(5) சிங்கள இராணுவ முகாம்களை அகற்று.

படிப்பகம்

www.padippakam.com



என சாதாரணப் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைப்போராட்டத்தின் உச்சக் கட்டமான நீரின்றி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கஆரம்பித்தான் திலீபன்.

துப்பாக்கியுடன் களத்தில் நின்று—காற்றுகச் சுழன்றவன், இந்தியாவுக்கு எதிராக, அவர்கள் வளர்த்த, போற்றித் துதித்த அகிம்சையின் வழியில்போரொன்று தொடுத்தான்.

உணவின்றி... நீரின்றி.. எத்தனை நாள்....? எத்தனை நாள்...?

உடற்கலங்கள் ஒவ்வொன்றும் தாகத்தால் மெல்ல, மெல்லச் செத்துக் கொண்டிருக்கையில்கூடத் தமிழீழ மக்களின் விடுதலைத் தாகம், அவனுடைய இலட்சியத் தாகம் உரமேறிக் கொண்டிருந்தது.

காந்தீயம் கை கட்டிக் கொண்டிருந்தது. காந்தீயம் செத்துக்கொண்டிருக்கையில் காந்தீயக் காவலர்கள்—கைகட்டிமௌனித்திருந்தனர்.

பன்னிரண்டாம் நாள் அந்தப்புயல் படுத்து விட்டது. ஆயிரம் ஆயிரம்எரிமலைகளை உருவாக்கிவிட்டு அந்தப் புயல் ஓய்ந்து விட்டது.

காந்தீயத்தின் முகமூடியைக்கிழித்து உலகுக்குக் காட்டிய உன்னத தியாகி 1987 செப்டம்பர் 26ம் நாள் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

அவன் மறைந்து ஓர் ஆண்டு மறைந்து விட்டது. எம் கண்களின்ஓரம் கண்ணீரின் ஈரங்கள் மட்டும் ஆறவே — இல்லை.

அவன் இறுதியாகச் சொன்னான்.

"தமிழீழ மக்களே

உண்மையான உறுதியான இலட்சியம் எங்கள் தலைவனின் இலட்சியம். எமது தலைவருடன் சேர்ந்து அந்த இலட்சியத்தை நீங்கள் அடையுங்கள்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலையடைவார்கள் எனவுணர்கிறேன்.

மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்"

அவன் சாகவில்லை. கல்லறை ஒன்று கருவறை ஆகிவிட்டது. தன்மரணத்தின் மூலம் ஆயிரம் ஆயிரம் மக்களை வீறு கொண்டெழச் செய்து கல்லறையொன்று கருவறை ஆகி விட்டது.

* * *

7ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து கிடைத்தற்கு அரியபொருளான "வாசமுள்ள சவுக்காரத்தினை வந்தவர்க்குத் தானம் கொடுத்துவிட்டேனே என வருந்துகிறாள். (அன்றைய காலகட்டத்தில் அவளைப் பொறுத்த வரையில் வாசனையுள்ள சவுக்காரம் பெறுமதியானது) இவை காதற் பாடல்களின்சில உதாரணங்களே. தவிர மொத்த உருவங்களுமல்ல. இப்படியான இலக்கியச் சுவைமிகுந்த இலக்கியங்கள் காலத்தால் அழிக்கப்படுவதும், மறக்கப்படுவதும் இலக்கிய நஷ்டத்தை ஏற்படுத்துவதோடு அந்த நாளைய கலை கலாச்சாரங்களின் தன்மையைநாம் —அறிந்துகொள்ள முடியாமற்போய்விடுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் கலை, கலாச்சார, அரசியல் வரலாறுகள் தற்காலத்தில் அச்செழுத்தின் மூலமாகவும், முற்காலத்தில் ஓலைச்சுவடிகள் மூலமாகவுமே அறிய முடிகிறது. ஆனால் அக்காலத்திய சமூகப்பண்பாடுகள் கட்டுப்பாடுகள், பேச்சுவழக்கில் இருந்த வார்த்தைகள் இலக்கண வரம்பில்லாமல் அவரவர் தம் மன உணர்வுகளை வெளிப்படுத்திய விதங்கள், மனித நேயங்கள் என்பவற்றை இப்படியதன நாட்டார் பாடல்கள் மூலமாகவே அறியமுடிகின்றது. இவை பண்டையகாலத்தில் பொறிக்கப்படாத கல்வெட்டுகளே.

(பாடல்கள்: சி.வே.வேலுப்பிள்ளையின் 'மலைய நாட்டார் பாடல்கள் தொகுப்பு')

12ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வளவு நேரமும் மெல்லியதாய் வீசிக் கொண்டிருந்த காற்றும் ஓங்கிச் சுழன்று வீசி... ...சொரிந்த சருகுகளை ஒதுக்கித் தள்ளி விட்டு அமைதியடைந்தது. ஆனால் அந்தச் சிறிய இதயம் மட்டும் கலங்கிக்கொண்டிருந்தது.

"ஒருவேளை நாளை இந்தச் சிறிய இதயம் கனலாக மாறலாம்" —ஜெ

படிப்பகம்

www.padippakam.com

# நாட்டார் பாடலும் காதல் இலக்கியமும்

தமிழ் இலக்கியத்தில் பலவகைப் பிரிவுகள் உண்டு. கிராமிய இலக்கியம், நாடோடிப்பாடல்கள், வாய்மொழி இலக்கியம், நாட்டார்பாடல்கள், என்பனவாகும். இவற்றுள் பெரும்பாலானவற்றை சங்ககால இலக்கியம், சங்கமருவியகால- இலக்கியம், என்பவற்றுள்ளே அடங்கும்.

ஆனாலும் இந்த இலக்கியத்திலெல்லாம் எல்லோரையும் கவரக்கூடியது நாட்டார் பாடல்களேயாகும் எனலாம். இவை தற்சமயம் காலத்தால் அழிந்துகொண்டிருந்தாலும் ஒரு சிலர் அவற்றைத் திரட்டி அச்சுவாகனமேற்றியுள்ளனர். அப்படியிருந்தும் எல்லா நாட்டார் பாடல்களும் அச்சுவாகனமேறியதாகச் சொல்லமுடியாது.

இவை வாய்வழியாக, செவிவழியாக பரம்பரையாக வருவதாலும்; இளைய தலைமுறையினர் மேல்நாட்டுநாகரீக இலக்கியத்தில்மோகம் கொண்டுள்ளதாலும் நாட்டார் பாடல்கள் மெல்ல மெல்ல அருகி வருவதை எல்லோரும் அவதானிக்க முடிகின்றது. அனேகருக்கு இதைப்பற்றிய கவலையே இல்லாமல் போய்விட்டது வருந்தக்கூடிய ஒரு விடயமாகும்.

இளையதலைமுறையினருக்கு நாட்டார் பாடல்கள் கேலிக்குரிய ஒரு இலக்கியமாகிவிட்டது காரணம், அவர்கள் இவற்றை அறிய முடிவதில்லை அதனாலேயே அதன் இலக்கிய நயங்களையுத் அவர்களால் புரிந்துகொள்ளமுடிவதில்லை.

நமது பண்பாட்டில் குழந்தை பிறந்தவுடன் "ஆராரோ ஆரிவரோ" எனப்பாடும் தாலாட்டு பாடல்; ஐரோப்பாவில் பிறந்த எம்மவர் குழந்தைகளனால் அனேகருக்கு இந்தத் தாலாட்டுப்பாக்கியம் கிட்டியிருக்காது. காரணம் தாயாருக்குத்- தாலாட்டுப்பாடல் தெரியாது இருக்கலாம் அல்லது இந்த நாகரீகத்துடன் ஒப்பிட்டால் அது அநாகரீகமாகத் தோன்றியிருக்கலாம். அதனால் அனேகருக்கு தாலாட்டுப் பாடுவது மைக்கல்ஜக்சனும் மடோனாவும் தான்-(மன்னிக்கவும்ஆனால் உண்மை) வளரும் பருவத்தில் விளையாட்டுப் பாடல், வாலிபப் பருவத்தில் காதல் பாடல், தொழில் செய்யும் காலத்தில் தொழில் பாடல், இறந்த பின்னர் ஒப்பாரி என நாட்டார் பாடல்களே பின்னிப்பிணைந் தமிழுடன் ஒன்றிவிடுகின்றது.

இந்தக் காலகட்டத்தில், குறிப்பிட்ட ஒ இலக்கியத்தை குறிப்பிட்ட ஒருவரே இயற்றினர் என அறிந்து விமர்சனம் செய்வதுடன் நோபல்பரிசுவரை கொடுத்துக் கௌரவப்படுத்துகின்றனர். இதனா அந்த ஆக்கத்தாருடைய அறிவு, திறமை என்பவற்றைப் பலர் அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கின்றது. ஆனால் நாட்டார் பாடல்களின் நிலை அப்படியல் பாடியவர் யார்? எந்தக்கால கட்டத்தில் பா னார்? எந்தச் சந்தர்ப்பத்தில் ஆக்கப்பட்டது என யாருக்கும் தெரியாது. ஆனால் இவற்றை இயற்றி வர்கள் பெரிய பண்டிதர்கள் அல்ல. சாதார பாமர மக்கள் தான்.

அவர்கள் கற்பனை இலக்கியம் எழுதவில்லை எதுகை மோனையோ, கவிதைவரைவிலக்க ணமோ அவர்கள் அறிந்திருக்கவில்லை. கண்ணால் பார்த்து, மனதில் துடித்து, சந்தோசத்தில் சிரித்து எண்ணங்களின் எழுச்சியை பேச்சுவழக்கிலுள்ள வார்த்தைகளாலேயே வெளிப்படுத்தினார்கள். இதனாலேயே இவை நாட்டார் பாடல்கள் என அழைக்கப்பட்டது.

இலக்கியங்கள் யாவற்றிலும் எல்லோராலும் ரசிக்கப்படுகின்ற பொதுவான ஒரு அம்சம் காதல். இந்த நாட்டார் பாடல்களிலும் அது விதிவிலக்குப் பெறவில்லை. நகரத்து வாசனையேயில்லாத கிரா மங்கள்; அங்கே ஆண், பெண் கட்டுப்பாடுகள் ப மாக இருக்கும். இவற்றையெல்லாம் மீறி ஒ ஆணும், ஒரு பெண்ணும் காதலிக்கும்போது அதி தோன்றும் சுகமே அலாதியானதொரு இன்பம். மு மீது ரோஜா இருப்பதால்த் தான் அந்தப் பூவுக் ஒரு மகிமை. அதன் வாசனை முள்ளையும் மீறி காற்றில்க் கலக்கிறது. கிராமத்துக் காதலும் கூ இந்தவகை தான்.

அது ஒரு வயற்கிராமம். பட்டணத்துவாடை இன்னமும் அந்தக் கிராமத்தைத் தீண்டவில்லை. நெற் பயிர்கள் பச்சைப் போர்வை போர்த்தி காற் றுக்கு நாணப்பட்டு தலைசாய்த்துக்கொண்டிருக்கின்றன. முகிலுக்குள் மறைந்துகொண்ட சூரியன் கடைக் கண்ணால் பார்த்து மெல்லச் சிரித்துக்கொள்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



பச்சைநெல்லுக்குள் தன்னிச்சையால் வளர்ந்திருக்கின்ற புற்களை, இளம்பெண்கள் கூட்டம் கூட்டமாகக் குனிந்து நின்று களையெடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களில் அவளொருத்தி தங்கத்தில் பதித்த வைரம்! அவளது செவ்வாழைக் கரங்களில் கண்ணாடி வளையல்கள்! சூரியவெளிச்சத்தில் கண்களைப் பறிக்கின்றன. முத்துதிரும் சொற்களின் கலகலப்பில் இவர்கள் களையெடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

அந்த நேரம் வயல்வரப்பில் வரும் கட்டிளம் காளையொருவன்; அவனுக்கு அந்த அழகிலே ஒரு கண். அவளை வம்புக்கு இழுத்துக்கிண்டல்செய்ய முனைகிறான்.

"கண்ணாடி வளையல் போட்டு
களையெடுக்க வந்த புள்ளே
கண்ணாடி மின்னலிலே – உன்
களையெடுப்புப் பிந்துதடி"

அவளுக்கும் அவன்மீது உள்ளூர ஒரு ஆசை. அவனது கிண்டலுக்காக காத்திருந்தவள் போல் காணப்பட்டால் ஏட்டிக்குப் போட்டியாய் அவளும் அவனைக் கிண்டல் செய்கிறாள்.

"வாய்க்கால் வரம்புச் சாமி
வயற்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்கு
காவலுக்கு வந்த சாமி..."

இந்தக் கிண்டலிலே சேர்ந்தவர்கள் காதலிக்க ஆரம்பிக்கின்றனர். இவர்களுடைய காதல் ஆற்றங்கரைகளிலும், மாந்தோப்பு மறைவுகளிலும் தளிர்விட்டு– மலர்கின்ற வேளையிலே, பொல்லாத இரு கண்கள் வீட்டிலே வத்தி வைக்க அவள் வீட்டுக்காவலில்...
..சிறைப்படுகிறாள். கண்கள் இமைக்கமறுத்தன அவளுக்கு உறக்கம் வரவில்லை. எத்தனைநாள்தான் இப்படித் தவிப்பது?

"காட்டுக்குள்ளே கமுக மரம்
கன்னி வைச்சு ஆறு மாசம்
பேசோணுமின்னும்
பெத்த தாய் சத்திராதி"

இந்த சமூகம் காதலை ஏன் எதிர்க்கின்றது? அவளுக்கு இந்தக் கேள்விக்கு விடை புரியவில்லை. மனம் குமுறுகின்றது.

"கடலோடு கடலுரச
கடலுத் தண்ணி மீனுரச
ஒன்னோடு நானுரச
ஒலகம் பொறுக்கலையே"

பஞ்சாயம் கூடுகின்றது. அவனும் அவளும் காதலித்தது தப்பு என்று அவனை ஊரைவிட்டு அனுப்புகின்றனர். அவன் அந்த மண்ணிலேயே தவழ்ந்து நடந்தவன். இன்று அந்த ஊரைவிட்டே போகப் போகிறான். அவனது இதயமோ அந்தக் கிராமத்திலேயே கண்ணீர் வடிக்கின்றது. யாரும் அறியாமல்– இரகசியமாக அன்றிரவு அவளைச் சந்திக்கிறான். தன்னுடன் ஓடிவரும்படி கேட்கிறான். அவள் மறுக்கிறாள். ஆனாலும்.......

"கண்ணீரே கரை கடந்து
ஆறாகப் பாயுதையா
நெஞ்சோடு உன் நினைப்பு
நெருப்பாக வேகுதையா..."

அவள் புலம்புகின்றாள் அவன் ஆறுதல் சொல்லுகிறான்

"இடி இடிச்சு மழை பொழிய
இரு கடலும் பொங்கி வர
கொடை பிடிச்சு நான் வருவேன்
துணமயிலே கலங்காதே...."

அவன் அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு ஏதோ ஒரு வேகத்தில் அந்த மண்ணைவிட்டு தூர.....வெகுதூர சென்றுவிடுகிறான்.

காலதேவனின் காலடி நகர்வில் அவளது....மனப்பாரம் கண்ணீராய்க் கரைகிறது. அவனது மனப்பாரம் காற்றில் கரைகிறது. அவள் இன்னமும் அந்தக் கிராமத்தில் கன்னியாய்க் காத்திருக்கின்றாள். அவனோ....? பட்டணத்தில் வந்துபாதையேமாறிவிட்டான்.

கிணற்றுத் தவளையை வெளியே தூக்கிப் போட்டால் அது கிணற்றையே மறந்துவிடுகின்றது. ஆனால் மீனைத்தூக்கி வெளியே போட்டால் அது துடிதுடித்து போகின்றது. அவன் தவளை. அவள் மீன். அவன் வேறொருத்தியைப் பட்டணத்தில் மணந்துகொள்கிறான். அவள் இதைக் கேள்விப்படுகிறாள். ஆனாலும் அவள் அவன் மீது கோபப்படவில்லை.

"பாலையை ஒழகவிட்டேன்...!
பன்னீரைச் சிந்தவிட்டேன்
வாசமுள்ள சவுக்காரத்த
வந்தார்க்குத் தானமிட்டேன்."

எனத் தன்னையே நொந்துகொள்கின்றாள் அந்தப் பேதை. காதலன் தன்னை மறந்த பின்பும் அவள் காதலை நொந்துகொள்ளவில்லை. ஏனெனில் அவளைப் பொறுத்த வரையில் காதல் புனிதமானது.

படிப்பகம்

www.padippakam.com

# நாங்கள்...!

— சுந்தர்

இன்று 4000கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடன் பூமிப் பந்து சூரியனைச் சுற்றி வரச் செய்கிறது. இந்த 4000கோடி மனிதர்களுள் ஆயிரம் ஆயிரம் ஏற்றத் தாழ்வுகள், குறைபாடுகள், சிக்கல்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. இந்த அனைத்துப் பேதங்களையும் தாண்டி பொதுமை ஒன்றைத் தேடுவோமாயின் மனித குலம் படிப்படியான ஒரு வளர்ச்சியை அனுபவித்து வருவதை நாம் அவதானிக்கலாம்.

புராதன சமூக அமைப்பிலிருந்து சிக்கலான சோசலிச நிர்மாணம் வரை சமூகங்கள் வளர்ந்து வருகின்றன. இதன் அர்த்தம் முழு உலகும் சம மட்டத்தில் தான் காணப்படுகிறது என்பது அல்ல. மேற்கூறிய வளர்ச்சிப்படிகளின் பல்வேறு கட்டங்களிலும் பல்வேறு சமூகங்கள் நிலை கொண்டுள்ளன. இயந்திர தொழில்நுட்ப வளர்ச்சியும், தனியுடமை நலன்களும் பேணப்படும் முதலாளித்துவ சமூக அமைப்பு — இச்சமூக அமைப்புக்கு வளர்ச்சி காணு நிலப்பிரபுத்துவ சொச்சம் கண்ட அமைப்புகள் என்பன இன்றைய உலகைப்பெரும் பான்மையாக நிரப்புகின்றன. எனினும் ஆங்காங்கே புராதன பழங்குடி அமைப்புகளும், ஆண்டான் அடிமை உறவுகளும் காணப்படுகின்றன.

மேற்கூறிய படிகளில் "நாம்" எங்கே இருக்கின்றோம்? ஈழத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நிலைப்பாடு எந்தப் படிகளில் காணப்படுகிறது? இவ்வளவுக்கு விடைகாணப்புகும்போது ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல வேறு பல ஆசிய, ஆபிரிக்க சமூகங்களைப் பீடித்துள்ள பீடைகளையும் ஆராய நாம் நிர்ப்பந்திக்கப் படுகிறோம். ஒட்டுமொத்தமாக, பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் இழிநிலைக்கும், அரைகுறைதன்மைக்கும் காலனித்துவமே காரணம் என நாம் வரைவிலக்கணம் செய்யலாம்.

18ம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் இங்கிலாந்தில் உருவெடுத்த இயந்திர உற்பத்தி முறைக்கான உத்வேகம் (இது தொழிற்புரட்சி எனப்பட்டது) முதலாளித்துவ சமூக உறவுமுறைகளுக்கு வலுவும், ஊக்கமும் கொடுத்தது. நிலங்களை உரிமையாகக் கொண்ட நிலப்பிரபுகளுக்கும் இயந்திர உற்பத்திமுறையை உரிமையாகக் கொண்ட முதலாளிகளுக்குமேற்பட்ட "போட்டியில்" தொழில் புரட்சி முதலாளித்துவ உறவுமுறைகளுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

தொழிற்சாலைகள், சாலைகள், க[illegible] வளங்கள் என்பவற்றைச் சொந்தமாகக் கொண்ட முதலாளிகள் சமூகத்தில் பெற்ற ஆதிக்கம் அரசியலை அவர்கள் வசப்படுத்த உதவியது. விஞ்ஞானம், கலாச்சாரம், கல்விமுறைகள் என்பன அரசியலை வசப்படுத்திக் கொண்ட முதலாளிகளின் கைகளுக்குள் தள்ளப்பட்டது. இதன் மூலம் வளர்ச்சி கண்ட முதலாளித்துவம் தனது தேவைகளைத் தனக்குத் தேவையான மூலவளம், சந்தை என்பவற்றைப் பூர்த்தி செய்யத் தனது பிரதேச எல்லைகளைத் தாண்டித் தான் விரிய வேண்டும் என்ற கருத்தை உருவாக்கியது. அதாவது முதலாளித்துவம் காலனிகளைத் தேடியது (முதலாளிகள் தொழிலாளர்களையும், மூலவளங்களையும், சந்தைகளையும் தேடினர்). அக்கொடூரவியாபார நோக்கங்களுக்குப் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலியாகின. ஆசிய ஆபிரிக்க நாடுகள் எங்கும் வளர்ச்சி கண்ட முதலாளித்துவ நாடுகள் காலனிகளை உருவாக்கிக் கொண்டன.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அன்றைய காலப்பகுதியில் ஆண்டான்— அடிமை நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புகளுக்குள் பெரும்பாலாகக் காணப்பட்டன. அரசினிற்குச் சொந்தமான அடிமைகளாய் மக்கள் வாழ்ந்தனர். விளை நிலங்களை உரிமையாகக் கொண்ட பிரபுக்களுக்கு அடிமையாகப் பெரும்பான்மை சமூகம் வாழ்ந்தது. இந்தவாழ்வு முறைக்குள் காலனித்துவம் தலையிட்டது. காலனித்துவ ஆட்சியென்பது அந்தந்த பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்களை நசுக்கிவிட்டு அந்தந்தப் பிரதேசங்களின் செல்வங்களை "களவெடுக்கும்" மோசமான பகற்கொள்ளையாக அமைந்தது. முழு முதல் நோக்கம் "பகல்கொள்ளையாக" இருந்ததால் அச்செல்வங்களின் சொந்தக்காரர்களின் நலன்களைப்பற்றி எவருமே கவலைப்படவில்லை. அதாவது அடக்கப்பட்ட சமூகங்களின் பொருளாதார வாழ்வு பின்னடிக்கப்பட்டதுடன் சமூக வளர்ச்ச தாமதிக்கப்படுத்தப்பட்டது. சமூகங்களின் விஞ்ஞான, கலாச்சார, கல்வி வளர்ச்சி மோசமாகப் பாதிக்கப்பட்டது. உலகம் மிகவும்பின் தங்கிய காலனித்துவங்களின் பிடியில் வாழும் மக்களையும் — இயந்திரஉற்பத்தி, விஞ்ஞானதுறைகளில் வளர்ச்சிகண்ட காலனித்துவ ஆட்சியாளர்களையும் கண்டது.

படிப்பகம்

ஈழத்தமிழர்கள் முதலாவது வகையின் கீழ் வாழ்ந்தனர். அவர்களது சமூகபொருளாதார வளர்ச்சி சுமார் 200 ஆண்டு காலம் மோசமாகக் காலம் — காணப்பட்டது. கால ஓட்டத்தில் காலனித்துவ அடக்கு முறைகளுக்குள் ஒருசிறு பகுதி ஈழத் தமிழர்கள் முதலாளித்துவ கல்வி வளர்ச்சியை அநுபவித்தனர். எனினும் தேசிய சுதந்திரம் அற்ற நிலையில் தாக்கமுள்ள சமூக பொருளாதாரமாற்றத்தைக் காலனித்துவ ஆட்சி நசுக்கியே வந்தது.

உலகப் போர்க்களம்— பொருளாதார நெருக்கடிகளை முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்குப் புதிய போதனைகள் தந்தன. நேரடிக் காலனித்துவம் நிரம்பிய விலை மதிப்பானது என்பதைப் புரிந்து கொண்ட "எசமானர்கள்" காலனிகளை மெதுவாகக் கைவிட்டு நவகாலனித்துவ சுரண்டல் முறைகளுக்குள் காலடிவைத்தனர். அக்காலப் பகுதியில் பெயரளவில் காலனிகள் விடுதலையடைந்தன. இவ்விடுதலையின்போது பிரிட்டிஸ் காலனிகள் பிறிதொரு சுமையையும் தூக்கிச் சென்றன. பிரிட்டிஸ் காலனிகள்தமது அடக்குமுறை காலத்தின் மோசமானபிரிவினைகளுக்கு ஆளாகி இருந்தன. காலனித்துவ எதிர்ப்புப் போராட்டம் உரு— வாகாமல் இருக்கப் பிரித்தாளும் சூழ்ச்சியை பிரிட்டிஸ் ஆதிக்கம் லாகவமாக பயன்படுத்தியது.

இந்தியா— பாகிஸ்தான் பிரிவினை, சைபிரஸ் பிரச்சினை, பாலஸ்தீனப்பிரச்சினை, தமிழ்— சிங்கள இன முரண்பாடு என்பன பிரிட்டிஸ் ஆட்சியின் தூண்டப்பட்ட பிரச்சினைகள் ஆகும். சமூக வளர்ச்சி இன்றிய சமூகங்களிடையே வளர்ச்சிக்கான பரந்த அடித்தளம் உருவாகாத விதத்தில் காலனித்துவம் தனது காலத்தை முடித்துக்கொண்டு நவகாலனித்துவ யுகத்தைப் பிரகடனப்படுத்தின. நவகாலனித்துவ யுகத்தில் வந்த்தக— சுரண்டல் நோக்கங்களை தந்திர உபாயரீதியான அடக்கு முறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டன.

இது தான் ஈழத் தமிழரின் இன்றைய நிலை. ஒருபுறம் சமூகபொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இனமுரண்பாடு வளர்க்க[illegible] மறுபுற இவ முரண்பா[illegible]க்க முடியாதவாறு சமூக பொருளாதார நிலைமை பலவீனமாகக் காணப்படுகின்றது. "நாம்" நிலப்பிரபுத்துவசொச்சங்களைக் கொண்ட முதலாளித்துவத்தை நோக்கிய கட்டத்தில் இருக்கின்றோம். ஏகாதிபத்திய நவகாலனித்துவத்தின் அழுங்குப் பிடிக்குள் குறைவிருத்திப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கின்றோம்.

எமது வளர்ச்சியை (சமூக, பொருளாதார, அரசியல், கலை, கலாச்சாரம், விஞ்ஞானம், கல்வி) காணவேண்டுமாயின் எமது தற்போதைய படியைவிட்டு நாம்மேலே செல்ல வேண்டும். மேலே செல்வதற்கு எமக்குள்ள விசை எமது புரட்சிகரமான எழுச்சி தான். இன்று எமக்குள் காணப்படும் தேசிய விடுதலைக்கானஆகர்சிப்பே எமது சமூக பொருளாதார வளர்ச்சிக்கு ஒருவழி. இவ்வழியைப் பயன்படுத்தி நாம் பெறும் ஒரு சோசலிசசமூக நிர்மாணமே நவகாலனித்துவ பிடியிலிருந்து எம்மக்களை விடுவிக்கும்.

சோசலிச சமூக நிர்மாணம் என்பது முதலாளித்துவத்திலும் மேலான வளர்ச்சியைக் கொண்டது. சமுதாய வளர்ச்சியின் உயர்ந்த கட்டம். புரட்சியின் வழியால் எழுந்த, பொருளாதார, சமுதாயஅரசியல், கலாச்சார, விஞ்ஞானநிலை மாற்றம் என்பன இந்த உயர்ந்த கட்டத்தைத் தருகின்றன.

எனவே, தற்போது நிகழ்ந்து வரும் ஈழத் தமிழ் பேசும் மக்களின் தேசியவிடுதலை எழுச்சியை நாம் வெற்றிப்பாதைக்கு நகர்த்துவதன் மூலம் எம் சமூகத்தை உயர்வான சமூக பொருளாதார உலகத்தினுள் செலுத்தி வளர்ந்து வரும் இன்றைய உலகில் நாமும் சகல அடக்கு முறைகளிலும் இருந்து விடுதலை பெற்ற மனிதர்களாகச் சூரியனைச் சுற்றி வருவோமாக!

### "உன் அரண்மனை என்க்கு வேண்டாம்"

பிரான்ஸ் தேசத்துச் சிந்தனையாளன் வோல்ரயர் அரசனை எதிர்த்து எழுதியமைக்காக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். அவரை மன்னன் 14ம் லூயி தனதுஅரண்மனைக்கு அழைத்தார்.

வோல்ரயரைப் பார்த்து மன்னன்பின் வருமாறு கேட்டார்.

"என்னையும் எனது ஆட்சியையும் புகழ்ந்தெழுதுவாயானால் உன்னை விடுதலை செய்வதுடன் அரண்மனையில் வாழ வசதி செய்து தருகிறேன்.

வோல்ரயர் பின்வருமாறு பதிலிறுத்தார்.

மன்னாதிமன்னா! உன் அரண்மனையைப் பாடும் சந்தர்ப்பம் எனக்கு வேண்டாம் உன் சிறைச்சாலையைப் பாடும் சந்தர்ப்பத்தை நீ எனக்குத் தந்தாற் போதும்.

மன்னாதிமன்னனின் நெஞ்சுக்கோட்டை அதிர்ந்தது. கற்கோட்டையின் இரும்புப் பூட்டுக்குள் வோல்ரயர் தள்ளப்பட்டார். ஆனால் வரலாற்றுக் கதவுகள் வோல்ரய

www.padippakam.com

# 10 தடுமாறும் இளநெஞ்சு கனலாகலாம்!



வரண்டுகிடந்த நிலத்தில் வசந்த காலத்தின் வருகை அவ்வளவாகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. குண்டுத் தாக்குதல்களின் கோர வடுக்கள், பரந்த தேசத்தில் குண்டும் குழியுமாகவும், இடிந்த எரிந்த வீடுகளாகவும், முறிந்த சரிந்த மரங்களாகவும்; கை, கால் இழந்த மனிதர்களாகவும் காட்சியளித்தன. மனிதர்களைவிட இயற்கை வசந்தத்தின் வருகையைப் பிரதிபலிப்பதாக இல்லை.

உச்சிப்பொழுது....சூரியனின் வெப்பக் கதிர்கள் பூமியைச் சுட்டெரிப்பதாலேற்படும் தாக்கத்தை மனிதர்கள் உணருவதாக இல்லை.......
...ஒருவேளை சிங்கள, இந்திய இராணுவத்தினது குண்டுத் தாக்குதல்களின் கோர நிஜங்கள் அவர்களின் மனங்களைக் கல்லாகச் சபித்திருக்க வேண்டும் என்றாலும் பார்வையில் தோன்றும் மனிதர்களின் கண்கள் ஈரலிப்பாகத் தான் இருக்கின்றன.

பிண வாடையும், கெந்தகக் காற்றையும் நுகர்ந்ததாலோ என்னவோ அவர்களின் முகங்களில் ஓர் கடூரம் தெரிந்தது. ஒருவேளை இழப்புக்களை அதிகமாகச் சந்தித்ததன்காரணமாகவும்இருக்கலாம் என்றாலும் அவர்கள் இடிந்துபோய்விடவில்லை. ஓர் முனையில் இருந்து இன்னோர் முனைக்கு ஒரே நேர் தெருவில் பயணப்படுகின்ற துரித கதி வாகனங்களை போல் அவர்கள் கலையாத குறிக்கோளுடன் இறுதித் தீர்வுக்காய் கொதிக்கும் உள்ளத்தோடு குறி பார்த்துச் செல்லுகிறார்கள்.

இந்தப் போராட்ட நகர்வில் பலரைத் தொலைத்துவிட்ட தியாகத் தமிழர்களின் கூட்டத்துள் ஓர் தமிழ்க்குலத்துப் பெண்.
ஆமாம் அவள்தான் கோமதி!
வசந்தத்தின் தெருக்களில் பவனிவந்த வாலிபக்குருவி தன் ஜோடியைப் பறிகொடுத்துவிட்ட பரிதாபத்திற்குரிய பறவை அது. எல்லைச் சிறகின் ஆர்ப்பாட்டம்–இல்லாத அசைவில்....கற்பனைப் பிரதேசத்தில், பறந்து திரிந்த ஜோடிகள். அப்பன், ஆத்தாளின் அதிகார மிரட்டலுக்கும், அடக்குமுறைக்கும் கட்டுப் படாத சுதந்திரக் காதலர்கள்.
நேற்று வரை அவர்களின் காதல் இன்பமாகத்தான் இருந்திருக்க வேண்டும். இன்றுதான் பெரும் விபரீ

ஆஸ்பத்திரிப் பிரேத அறையுள் மேற்கொண்டு சடலங்களை வைக்கப் போதிய இடம் இல்லாத காரணத்தால் பிரேத அறையின் வெளித் திண்ணையில் கரடுமுரடான அழுக்கான அந்த இடத்தில் வளர்த்தி விடப்பட்ட பிணத்தில் 'நொய்'...'நொய்' என்று இரைச்சலுடன் மொய்க்கின்ற இலையான்களை சிறு கிளையொன்றால் விரட்டியபடி குந்தியிருந்தாள்....
....கோமதி.

வயது பதினெட்டைத் தாண்டியிருக்காது; பிரபலமான மகளிர் கல்லூரியொன்றில் படித்துக்கொண்டிருக்கிறாள். திருமணமாகவில்லை; என்றாலும் எதிர்காலத்தில் தன் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொள்ள ஓர் அன்பான இதயத்தைக் காதலித்தாள் அந்த இதயம் தான் கபாலம் சிதறுண்டு காட்சிப்

படிப்பகம்

www.padippakam.com

ஆஸ்பத்திரியில் ஒரே கூட்டம்; விடுப்புத்தான்
ர்க்கிறார்கள்... என்றாலும் வேதனை ததும்பப்
ர்க்கிறார்கள். உள்ளம் குமுறப் பார்க்கிறார்கள்.
ங்கே இருந்த கதவுகள் இல்லாத மலசலகூடத்தில்
ந்து வந்த ஈரலிப்பான தர்வாடையும், ஆஸ்பத்
ருக்கே உரித்தான மருந்து வகைகளின் காரமண
ஒன்று சேர்ந்து மூக்கை அரித்த வண்ணமே
ந்தது.

கந்தவனம் வாத்திக்கு வேலுமணி நேரிலே
சம்பவத்தைப் பார்த்தவன் போல் அளந்து
காண்டிருந்தான். அவனைச் சுற்றி விசயத்தை அறி
ஆவல்கொண்ட விழியோடு சில வெள்ளைவேட்டி
ளும், கிழிந்த சறங்களும் சூழ்ந்து காணப்பட்டன.
யோதிபப் புடவைகளும் அங்கு காணப்பட்டன. ஆஸ்
பத்திரி வளவு தான்; என்றாலும் கட்டுப்பாடில்லா
மனிதர்கள் நிறைந்திருந்தனர்.

அருகருகே இருந்த வாட்டுக்களில் படுத்தி
ந்த நோயாளிகளும் கட்டுகள் போட்ட ..., கை
ால்களுடன் அந்தக் கூட்டத்தில் காணப்பட்டனர்.
பாலம் சிதறிய பிணத்தையும், அந்த உடலை அன்
னுல் போல் புலம்பிக்கொண்டிருந்த அந்த இளவய
ப் பள்ளி மாணவியையும் மாறிமாறிப் பார்த்து
ட்டு, பின்னால் இடித்துக்கொண்டிருக்கும் மனிதர்க
க்கு இடம் விட்டுவிட்டு கனத்த இதயங்களோடு
ன்னால் செல்கிறார்கள்.

சே" என்ன வாழ்க்கை இது?
றப்பவன் எல்லாம் இறப்பது நிஜம் தான் என்று
ம், அடிமைகளாய், சுதந்திரம் மறுக்கப்பட்ட
நடிமக்களாய் இறப்பது தான் மரணத்தை விடக்
கொடியதாக இருக்கின்றது. கடலலை மேல்
தோன்றும் நீர்க்குமிழி போன்றது தான்வாழ்க்கை
என்று கூறும் வேதாந்தியைப் போல் தெருவில்
தென்படுகின்ற வயோதிபர்கள் எல்லாம் வேதாந்
தம் பேசுகிறார்கள். உணர்ச்சி உள்ளவர்களாக -
இருந்தாலும் உடலிலே வலு இல்லாவிட்டால் அவர்
கள்ால் வேதாந்தம் மட்டும்தான் பேச முடியும்
அப்படிப் பேசிக்கொள்வதால்த் தான் அவர்களின்
மனங்கள் சிறிதளவாவது ஆறுதல் அடைகின்றன

பள்ளிக்கூடத்தைவிட்டு நேராக 'டீஸ்
ல்ராண்டுக்குப்' போனவர்கள் என்ன நினைத்தார்
களோ திரும்பி 'கல்பாருக்குப்' போவதற்கிடை
யில் இப்படியா? வங்கிக் கட்டிடத்திற்குள் இரா
ணுவ உடையுள் காலன் காத்திருப்பான் என்று
யார்தான் அறிவார்? ....

அவள் குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டிருந்தாள்..
பெற்ற வயிறும் அல்ல.....
உடன் பிறந்த உறவும் அல்ல......
தூய்மையான காதலால் கட்டுண்ட இதயம்; இப்ப
டித்தான் புலம்பிக்கொள்ளும்.
தன் நிர்க்கதியை நினைத்தா அழுகிறாள்?.....
இல்லவே இல்லை...நிச்சயமாக இல்லை....
அன்புள்ளம் கொண்ட மனிதர்கள் இந்த அழுகையின்
அர்த்தத்தைப் புரிந்துகொள்வார்கள். ஆழமான-
அன்பிற்கும் அழுகைக்கும் இடையில் இருக்கின்றஇறுக்
கமான உறவினை இளகிய மனமுடையோர் அறிந்து
கொள்ளுவார்கள். அன்புள்ளம்கொண்ட காரணத்
தால் தானே என்னிய தருணத்தில் பெண்மையின்கண்
களில் நீர் திரையிடுகின்றது. நாடிநரம்புகளிலோடு
கின்ற செங்குதிகள் நிறம்மாறிக் கண்ணீராய் வெளி
யேறுகின்றன.
ஆக ஏதோ ஒரு வகையில் தமிழர்களின் குருதியை
மன்மாதா உறிஞ்சிக்கொண்டிருக்கிறாள்.
அவனது கபாலம் சிதறி அதனூடே தெரியும் உள்
உறுப்புக்களைப் பார்க்கச் சகிக்காமல் சிலர்
கைகளால் முகத்தைப் பொத்திக்கொள்ளுகிறார்கள்
புருவத்தையும் கண்களையும் சுருக்கிக்கொண்டு உதடு
களை ஒருபக்கம் கோணிக்கொண்டுசட்டென்று தம்
பார்வைகளைத் திருப்பிக்கொள்ளுகிறார்கள்.
அடுத்தவர்களின் விழிகளை ஏக்கம்பொங்கப்
பார்க்கிறார்கள். அந்தப் பார்வையினூடே உணர்வு
பொங்க உரையாடிக்கொள்ளுகிறார்கள். இத்தனைக்
கும் கோமதி எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு
ஈயோட்டிக்கொண்டிருக்கிறாள். மெல்லியதாய் எழு
கின்ற தர்வாடைகூட அவளது நாசிக்குளெட்டவில்லை
பிணத்தைப் பொழுதுபடுவதற்குள் ஏற்றிச்சென்றுவிட
வேண்டும். அல்லது அனாதைப்பிணம் போல அப்ப
டியே விட்டுவிட வேண்டும்.
பிணத்தைக்கொண்டு செல்வதற்கு வாகனம் பிரச்
சினை இல்லை...
அதோ! தெருவின் மையப் பகுதியில் பல வாக
னங்கள் குறுக்காக விடப்பட்டுத் தயாராக நிற்
கின்றன. அத்தனையும் பிணம் ஏற்றும் வாகனங்கள்
அழுக்கேறிய சாரங்களுடன் அருகருகே சாரதிகள்
காத்துக்கிடக்கின்றனர்...
அவர்களுக்குத் தான் சரியான வருமானம்போலும்
பிணத்தை ஏற்றிக்கொண்டு எங்கு செல்வது?....
போக்கிடமற்ற ஒரு அனாதையைக் காதலித்தத
ற்காக அவளும் ஓர் அனாதையாக்கப்பட்டுவிட்டாள்
அவளுக்கு அழுவதைத் தவிர மாற்றுவழி தெரிய
வில்லை.

(27 பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

14.

# தியாக தீபங்கள்.

"ஆராரோ... ஆரிரரோ..!" தாலாட்டுப் பாடித் தன் குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள் ரதி. இடைவிடாத ஷெல் சத்தங்களும், பீரங்கிவேட்டுக்களும் அந்த மழலையைத் தூங்கவிடாது செய்து கொண்டிருந்தன. போதாததிற்கு வானத்திலே விமானங்களின் பேரிரைச்சல்.

ரதி சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். இரவின் சுகத்திலே முட்கள் ஒன்றையொன்று தழுவிக் கொள்ள சில நிமிடங்கள் தான் இன்னும் இருந்தன. லேசான குளிர்காற்று திறந்திருந்த ஜன்னலின் ஊடாக உள்ளே நுழைந்து அவளை வருடிச் சென்றது. அப்போது விழித்து எழுந்து வந்த மூத்தமகன் சந்துரு ரதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு....

"அம்மா... அப்பா எப்ப வருவாரு... நான் அப்பாவோட டூ... அவர் வந்தா நா கதைக்க மாட்டேன்" என்று தன் மழலையில் பேசியவாறு உறங்கிப் போனான்.

ரதி தன் கணவனை நினைத்துக்கொண்டாள். "இந்த நள்ளிரவுக் குளிரில் — என்ன செய்து கொண்டிருப்பாரோ... இங்க நாங்கள் சொகுசாகப் படுத்திருக்கக்க அங்கே அவர் காட்டிலும் கட்டாந் தரையிலும் எப்படி நித்திரைகொள்ளுறாரோ?" அவனை நினைக்கும் — போது அவளிடமிருந்து சோகம் கலந்ததொரு பெருமூச்சு வெளிப்பட்டது. ஆனாலும் தன் கணவன் ஈடுபட்டிருக்கும்பணியை எண்ணும் போது அவளுக்குப் பெருமையாக இருந்தது.

தமிழீழத்தின் ஆனந்த நகரைப்புறப்பிறமாகக் கொண்டவள் ரதி. எழில் கொஞ்சும் வயல்களும், நீரோடைகளும் நிறைந்த ஆனந்த நகரை, மண்சோறு சமைத்து, தோழர்களுடன் அப்பா, அம்மா விளையாட்டு விளையாடிய இடத்தை விட்டுப் பிழைப்பிற்காய் பெற்றோர்களுடன் கொழும்பு சென்றபோது ரதியும்கொழும்பு போக வேண்டியவளானாள்.

சிலருக்குக் கொழும்பு வாழ்க்கை சொர்க்கபுரி தான். ரதிக்கும் பெற்றோருக்கும் கொழும்பு வசதிகளை அளித்தது. ஆனாலும் வசதிகளில் ரதி மயங்கிவிடவில்லை. தமிழ் மக்கள் அடக்கப்படும்போது, தமிழ் மக்களிற்குக் கொடுமைகள் இழைக்கப்படும்போது அவள் பொங்கி எழுவாள். எவ்வளவு காலத் [illegible]

தலை நிமிராமல் வாழ்வது எனச் சக-தோழர்களிடமும், தோழிகளிடமும் விளுவுவாள்.

கொழும்பிலும், ஏனைய தென்பகுதிகளிலும் சிங்கள இனவாதத் தலைவர்கள் அடிக்கடி சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு அந்த இனவாதத் தீயில் குளிர் காய்ந்து தங்கள் அரசியல் வாழ்வை நடாத்திக் கொண்டிருந்தனர். விளைவு அடிக்கடி இனக்கலவரங்கள் தோன்றலாயிற்று. தமிழ் மக்களின் சொத்துக்கள் உயிர்கள் சூறையாடப்பட்டன.

ரதியின் பாடசாலைப் பேச்சுகளாலும், சமூகத் தொண்டுகளாலும் ஆத்திரமுற்ற இனவாதக் கும்பல், 83ல் அரசாங்கம் திட்டமிட்ட இனக்கலவரத்தை ஏற்படுத்தியபோது ரதியின் பெற்றோர்கள் இனவெறி அரக்கனுக்குப் பலியானார்கள். ரதியையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கினார்கள்.

நல்ல மனம் கொண்ட ஒருசிலரால் அவள் அகதி முகாமில் சேர்க்கப்பட்ட—போது... அவளின் நிலை கண்டபிரதீபன் அவளுக்கு ஆறுதல் வழங்கினான். அவள்தற்கொலை செய்ய எண்ணியபோதுபிரதீபன் "ரதி, பலாத்காரம் என்பது... வெறியர்களின் ஆயுதங்களின் ஒன்று. ஆண்களை எப்படி எப்படியெல்லாம் சித்திரவதை செய்கின்றார்கள் தெரியுமா? அதைப் போலத்தான் பெண்களின் மீறுபாவிக்கப்படும் சித்திரவதை தான் பலாத்காரம். சித்திரவதைகளின் பின்னும் மனிதன் வாழத்தானே செய்கின்றான். நீர் ஏன்வாழக் கூடாது?" என அவளுக்குப் பல ஆறுதல் கூறி அவளைத் தனது மனைவியாக்கிக் — கொண்டான். இன்பமான அவர்களின்இல்லற வாழ்வின் சாட்சிகளாக முத்தான இரண்டு குழந்தைகள் அவர்களுக்குச்சொந்தமாகின.

இனிமையான அவர்களின் இல்லற வாழ்வில் மீண்டும் இனவெறி அரக்கன் குறுக்கிட்டான். தாயகப் பணிக்கு என எல்லோரும் புறப்பட்டபோது தான்மட்டும் மனைவியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு வாழ்வதை விரும்பாத பிரதீபன் தாயக மீட்புப் பணிக்குப் புறப்பட்டான்.

தங்கள் இனம் அழியும்போது தாங்கள் மட்டும் தப்பினால் போதும் என்று ஓடிஒழியும் கூட்டத்தினருடன் சேராமல் ரதியும் பிரதீபனுக்கு வீரத்திலகம் இட்டு [illegible] வைக்காள்.

படிப்பகம்

www.padippakam.com



பிரதீபனும் கெரில்லாப் பயிற்சியை முடித்துக் கொண்டு ஒரு பிராந்தியத் தளபதியாக விளங்கிக் கூலிப் பட்டாளத்தை நடு நடுங்க வைத்துக் கொண்டிருந்தான். நேரம் கிடைக்கும்போது தன் அன்பு மனைவியையும், குழந்தைகளையும் பார்த்துவிட்டுச்செல்வான்.

எதிரிகளை விரட்டி எம் மண்ணில்வெற்றிக் கொடிஏற்றப்படும் என்று எல்லோருமே எண்ணிக் கொண்டிருந்தபோது தான் ஈழத் தமிழரின் கண்ணீர் துடைக்கவும், அவர்களுடைய பசிக் கொடுமைக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதாகவும், மனிதவதைகளைக் காந்தீயம் பொறுக்காது, அப்பாவிகள் இரத்தம் சிந்தும் போதெல்லாம் மிக அண்மையிலிருந்து கொண்டும் அகிம்சைகள் கண்ணை மூடிக் கொண்டிருக்காது எனக் கூறிக் கொண்டு சமாதானப் படையின் போர்வையுடன் வந்து குதித்தது, இந்திய ஆதிக்கம். ஈழத்துத் தமிழர்களுக்குத் தோள் கொடுப்பதாகக் கூறிக் — கொண்டு வந்தவர்கள் சிங்கள இனவாத ஆதிக்க அரசுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டது. விளைவு மீண்டும் கண்ணீர்க் காவியங்களும், வீர காவியங்களும் குருதி மையினால் எழுதப்படத் தொடங்கின.

மக்களின் உண்மையான காப்பாளர்களான வீர மறவர்கள் தங்கள் உயிரைத் துச்சமென மதித்துப் போராடத் தொடங்கினார்கள்.

வானம் கூடத் தமிழ் மக்களை நினைத்து வேதனையால் கண்ணீர் விடத்தொடங்கியது. அதன் கண்ணீர்த் துளிகளின் சிதறல்களால் தன் குழந்தையின் உறக்கம்கலைந்துவிடுமோ என்று எண்ணியவளாய் ரதி ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு வந்து மகவின் அருகில் படுத்துக்கொண்டாள்.

அதே நேரம் கொட்டும் மழையையும்பொருட்படுத்தாமல் பிரதீபின் அணிஅந்த மினிமுகாமை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சில தினங்களில் அந்த மினி முகாம்விஸ்தரிக்கப்படவிருந்தது. எனவே அதனைத் தாக்கி அழிக்க வேண்டும் என்றெண்ணியவர்களாய் பிரதீபனின் அணியினர்நெருங்கிக் கொண்டிருந்தனர்.

இயற்கை தந்த ஆதரவால் முகாமிற்குள்ளிருந்தோர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தனர். சென்றியிலிருந்தோர் மட்டும்தூக்கக் கலக்கத்துடன் காவல்காத்துக்கொண்டிருந்தனர்.

முகாமை அண்மித்த அந்த வீரர்கள் தங்களை ஆசுவாசப் படுத்திக் கொண்டனர். இயற்கையின் கண்ணீர் இப்பொழுது அதிகரித்திருந்தது.

முகாமின் பாதுகாப்பு வேலியைபாதுகாப்புக் கையுறை அணிந்தவர்கள் வெட்டி

பிரதீபனும் ஏனையோரும் உள்ளே வந்து நிலையெடுத்துக் கொண்டு தாக்கத் தொடங்கினர். சென்றிலைட் சுட்டுத் தள்ளப்பட்டன. சென்றியில் நின்றவர்களும் சுருண்டு விழுந்தனர். போராளிகளின் ஆர்.பி.ஜீ.யின் தாக்குதலால் எதிரி வாகனங்கள் சிதறலாயிற்று.

தூங்கிக் கொண்டிருந்த முகாம்விழித்துக் கொண்டது. உத்தரவுகள் வழங்கப்பட்டுச் செயல்பட முன்னரே மரணத்தை மணந்த மாவீரர்களான தற்கொலைப் படையினர் வெடி குண்டுகள் சகிதம் முகாமிற்குள் நுழைந்து தங்களையும் அழித்து முகாமிற்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்தி விடுதலைத் தீபத்திற்குத் தங்கள் உயிரைத் தாரைவார்த்துக் கொண்டனர். எனினும் எமர்ஜென்சி விளக்கு ஏற்றப்பட்டு மாடியிலிருந்து 50 கலிபர் இயக்கப்பட்டது. போராளிகளில் சிலர் குண்டு பட்டு விழத் தொடங்கினர்.

முன்னால் ஓடி வந்த பிரதீபன் ஒரு மண்மூட்டையின் பின்னால் பதுங்கிக் கொண்டான். கலிபர் சுழன்று சுழன்று சுடத் தொடங்கியது. குண்டுகள் அவன் தலையைச் சிராய்த்துக் கொண்டுசென்றது.

பிரதீபன் யோசித்தான். எப்படியும் கலிபரை இயங்காமல் செய்து முகாமை முற்றாக அழிக்க வேண்டும். இல்லாவிட்டால் உதவிப்படை வந்து நாங்கள் தோற்றால் எம்மக்களைப் பூண்டோடு அழித்து விடுவர். கலிபரையும் அதனை இயக்குபவரையும் எப்படியும் அழிக்க வேண்டுமென அவன் தனக்குள் எண்ணினான். ஆனால் அதனை நருங்கித் தாக்க முடியுமா? தாக்கி விட்டுத் திரும்ப முடியுமா? என்று அவன் யோசித்தான்.

பின்பு ஒரு முடிவுக்கு வந்தவனாய் வெடிகுண்டைக் கையில் எடுத்துக்கொண்டான். ஒரு கணம் அவனது அன்பு மனைவியையும் குழந்தையையும் நினைத்துக் கொண்டான்.

"அப்பா..அப்பா.."என்று தன்னையே சுற்றிவரும் சந்துரு....பால் மணம் மாறாத அந்தக் குழந்தை அதன் பிஞ்சு விரல்கள்...பிரதீபிற்கு அவர்களின் எண்ணம் வந்ததும் கால்கள்தடைப்பட்டன. ஆனால் அவன் தன் தாய் — நாட்டின் மக்களை எண்ணிப் பார்த்தான், கண்ணீர்க் கோலங்களுடன் நிற்கும் அவர்களுக்கு விடிவு வேண்டாமா? சந்தோஷம் அவர்களின் வாழ்வில் மீண்டும் தோன்ற வேண்டாமா என்று நினைத்தவனாய், தற்கொலைப் படையினரின் சத்தியத்தை எண்ணிப் பார்த்தான்.

படிப்பகம்

www.padippakam.com





"நாங்கள் சந்தோஷமாய் மரணத்தை ஏற்றுக் கொள்கின்றோம். ஏனெனில் எங்கள் மக்கள் விடுதலை அடைவார்கள்".

அந்தச் சத்தியத்தை மனதிற்குள் கூறிக் கொண்டே கலிபரை நோக்கி ஓடிப் போய் வெடிகுண்டை எறிந்தான், அதே நேரம் கலிபரிலிருந்து புறப்பட்ட சன்னங்கள் அவன் உடலைச் சுவைத்தன.

தன் தாய் நாட்டிற்குத் தன்னையே அர்ப்பணித்த பிரதீபனின் உடல் தாய்மண்ணுடன் சங்கமமானது. தாயும் அவனை நோகாது வாங்கிக் கொண்டாள்.

பின்னால் வந்த ஏனையோர் பிரதீபனின் முடிவு கண்டு திகைத்தாலும், மின்னல் வேகத்தில் முகாமைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றிக்கொண்டு கட்டிடங்களையும் தகர்த்தனர். சிலர் பிரதீபனின் உடலை எடுத்துக்கொண்டுசென்றனர்.

சிவந்த வானம், வெண்மையாகத் தொடங்கியது. ரதி கதவு தட்டப்படுவது கண்டு யாராயிருக்கும் என்று யோசித்தவாறு கதவைத் திறந்தாள்......

எதிரே... போராளிகளின் கைகளில் துவண்டு கிடந்த கணவனின் உடலைக் கண்டவுடன் திகைத்து நின்று விட்டாள். ஆனாலும் கண்கள் கண்ணீரைச் சொரியவில்லை. முகம் சோகத்தால் வாடவில்லை. ஆனால் இறுகிப் போயிருந்தது. வைத்த கண் வாங்காமல் பிரதீபனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ஆட்களின் சத்தத்தால் எழுந்துவந்த சந்துரு, தகப்பனைக் கண்டதும், ஓடிச் சென்று, "அப்பா... அப்பா...!" என்று அழைத்துப் பார்த்தான். அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராது கண்டு, "அம்மா அப்பாவைப் பாரம்மா.. என்னோடை...டுவாம்.. கதைக்கச் சொல் அம்மா." என்று அழத் தொடங்கினான்.

சந்துருவை அணைத்துக் கொண்டரதி "சந்துரு! அப்பா.. இனி யாருடனும் கதைக்க மாட்டாரடா... அவரன்பணியை முடித்துக் கொண்டு போய்விட்டாரடா, நீயும் பெரியவனாய் அவரின் பணியைசெய்யடா..." என்று கூறியவாறு... போராளிகளினால் இறுதி மரியாதைக்குக்கொண்டு செல்லப்படும் பிரதீபனின் உடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

-மதன்-

* *

ஈழத்து புதினங்கள் சிலவற்றில் இருந்து...

1. இலங்கையர் கோன் எழுதிய 'முதற்காதல் (1942) என்னும் புதினத்திலிருந்து :

இளமை : ஓ இளமையே! உனக்கு அச்சம் என்பதில்லையா? ஒன்றையும் பொருட்படுத்த மாட்டாய்! உலகில் உள்ள எல்லா செல்வங்களுக்கும் தலைவன் நீ. துயரமும் ஏக்கமும் உன்னை வருத்துவதில்லை. அவை உனக்கு மகிழ்ச்சியையே கொடுக்கின்றன நீ கொண்டிருக்கும் நெஞ்சழுத்தத்திற்கு ஓர் அளவில்லை. அதனால் உன் நாள்கள் ஒவ்வொன்றாகத் தேய்ந்து மறைந்து போவதுகூட உனக்குத் தெரியவில்லை. உன் பொருளெல்லாம் உருகி அற்றுப் போகிறது. தீயிற்பட்ட மெழுகு போலவும் உருகுகின்றது ஒரு வேளை வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், நிகழ்காலத்தையே நிலையுள்ளதாக மதித்து, எல்லாம் 'உன் வல்லமைக்கு அடங்கியதுதான் என்று ஆணவம் கொண்டு உன் செல்வ அனைத்தையும் காற்றிலே அள்ளித் தூற்றும் உன் கவலையற்ற மனப்பான்மை ஒன்றில்தான் உன் பெருமை தங்கியிருக்கிறது போலும்!

2. அ. மரியதாசன் எழுதிய 'பனைநாடு (அ) பிளந்த உலகம்' (1953) புதினத்திலிருந்து :

காலைநேரம்! காலை ஆகிறது: வானில் முகிலொன்றும் இல்லை செஞ்ஞாயிறு முனை கடலினின்று பரிதியாய்த் கிளம்புகின்றது கடலில் அங்கொன்று இங்கொன்றாய் மிதந்து செல்வன யாவை

அஃதோர் ஆவின் பிணம்! இஃதோர் ஆட்டின் உடல் முகம் வசமம் பார்த்தாற்போல் செல்வது ஓரரிவையின் உடலம் குப்புற மிதந்து துவள்வது ஓர் ஆடவனின் உயிர் நீங்கிய யாக்கை

மிதக்கின்ற பனை, தென்னைகளுக்கு ஒரு கணக்கே இல்லை ஆனால் சில பனைகளின் முடிகளே தென்படுகின்றன. இவை மி உயர்ந்தனவும் இன்னும் நிலம் பெயராதனவுமாய் இருத்தல்

படிப்பகம்

www.padippakam.com

3. கே.வி.எசு. வாசு எழுதிய 'குந்தளப் பிரேமா' விலிருந்து

விளம்பர உலகம் : இந்த விளம்பர உலகத்தில் கம்பரும் காளிதாசரும் மறுபிறவி எடுத்து வந்தால் கூட ஓரளவு விளம்பரமில்லா விட்டால் உலகம் அவர்களை மாபெரும் பாவலர்கள் என்று ஒத்துக்கொள்ளாது என்று இரமணி அடிக்கடி சொல்லுவான். 'தமிழ் நாட்டையே எடுத்துக்கொள்ளுங்களேன்! இன்றும் நம்மிடையே எவ்வளவு பாக்களை இயற்றித் தமிழை வளம்பெறச் செய்கிறார்கள்! அவர்களை நீங்களும் நானும் பெரும்பாவலர்கள் எனச் சொல்லிவிட்டால் உலகம் ஒப்புக்கொண்டு விடுமா? அவர்கள் செத்துச் சாம்பலான பிறகு ஏதோ ஓரிரண்டு நாளேடுகள் அவர்களது பழைய பாக்களைச் சுவைத்து விட்டுப் புகழுகின்றன. உடனே ஒரேயடியாக மற்ற தாளிகைகளும் இந்திரன் சந்திரன் என்று வானளாவப் புகழ்கின்றன. பிறகு மாண்ட பாவலர்கட்கு நினைவு மண்டபமும் நானும் நிறுத்த கூட்டம் போட்டு முடிவெடுக்கிறார்கள். இந்த அளவு அந்தப் பாவலன் உயிருடன் இருக்கும் போதே ஏற்படுவதுதானே! வறுமையில் வயிற்றைச் சுருக்கிக் கூழுமில்லாமல் செத்துமடிகிறான் தற்காலப் பாவலன். அவனைப் போற்றி ஆதரிக்க ஆளில்லை. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இன்று கன்னுபின்னு என்று ஏதோ எழுதித் தள்ளும் அரைகுறைப் பேர்வழிகளைக்கூட விளம்பரம் என்னும் ஆற்றல் அறிவாளி'யாக்கி விடுகிறது. விளம்பரம்தான் இன்றைய வணிகத்தின் உயிர்நாடி. என்று இரமணி ஒரு குட்டிச் சொற்பொழிவு செய்வான்.

4. மு. வே. பெ. சாமி எழுதிய 'யார் கொலைகாரன்?' புதினத்திலிருந்து (1954)

பாட்டாளி : ஏழை என்றால் இன்பமாளிகைக்குப் பணக்காரன் ஏறிச்செல்லும் ஏணி என்றுதானே பொருள். அந்த ஏழைக்குப் பசியென்றால் அவர்களுக்குப் பன்னீர் இறைத்ததைப்போல, அவன் பட்டினி என்றால் பேரின்பமடைவார்கள். இறப்பு என்றால் மாந்தனுக்கு ஏற்படுத்தப்பட்ட நிலையான உயிர்ச்செலவு என நீட்டோலை வாசிப்பவர்கள். சிந்தும் கண்ணீர் அவர்களின் தேள் கொட்டிய கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிக்கும் பாட்டாளி என்றால் காலடியில் வீழ்ந்துறங்கும் நாய்கள் என வரட்டு 'வேதாந்தம்' பேசுவார்கள்.

எசு. பொன்னுத்துரை எழுதிய 'தீ' யிலிருந்து (1961):

உணர்ச்சிகள் : இனியவையாகத் தோன்றியவை யெல்லாம் துன்பச் சாயலில் கருகுகின்றன. மங்கையின் பட்டுக் கன்னங்களை நினைவுபடுத்திய அந்தி வானம், கூறிய வாளினால் பிளந்தெறியப் பட்ட மூளி முண்டங்களிலிருந்து பாயும் அரத்தத்தை நினைவு படுத்துகின்றது. வேல்விழி மாதரின் மயக்கமூட்டும் சிந்தைகளை மனத்தில் நிறுத்திய விண்மீன்கள் புன்னகை புரள, அலை தெளிய, தேனூறும் குமரி இதழ்களை நினைவுறுத்தும் குங்குமச் சிமிழ் போர்க்களம் விட்டோடிய கோழையின் முதுகில் ஏற்பட்ட காயத்தின் சாயலைக் காட்டுகிறது. பஞ்சு மெத்தை, நான் படுத்துக்கொண்டதும் தீப்பற்றி எரிகிறது. உணர்ச்சிகள் மரத்துப் போகின்றன.

இளங்கீரன் எழுதிய "நீதியே நீ கேள்", புதினத்திலிருந்து 1959:

சுரண்டல் முறை: வயிற்றுக்காக - கூலிக்காக - ஏழைகள் பணக்காரர்களிடம் வேலை செய்கிறார்கள். ஆனால், அவர்கள் உயிரை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்வதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான், அவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. மற்றப் பயனெல்லாம் பணக்காரர்களுக்கு - சொத்துக் குவியவர்களுக்குச் சேர்கிறது. அதை அவர்கள் ஊதியம்-வருமானம் என்ற பெயரில் தங்கள் கணக்கில் வரவு வைத்துக்கொள்கிறார்கள், இந்தச் சுரண்டல் முறையிலேயே முழுக்க முழுக்க ஊறிப்போன முதலாளி பரமசிவம் பிள்ளையும் தன் கடை ஊழியர்களிடமும் இப்படித்தான் நடந்துகொண்டாரென்றால் வள்ளிபுரத்தை மட்டும் விட்டு வைப்பாரா!

☐ சோம்பேறியான ஓர் இனம் கெட்டழியும். சாதி ஆசாரம், மதத்தின் மூட நம்பிக்கைகள் தமிழனைச் சோம்பேறியாக்கி விட்டது.

# ஒற்றைக் கொடி... 15

கொந்தளிக்கும்
கடலலைகள் நடுவே
காலக் கலண்டரின்
நிமிடப் பூக்களைக்
கிழித்துக் கொண்டிருப்பவர்கள்
நாங்கள் . . .

சாமரமும் பல்லக்கும்
சகதி தோய்ந்ததால்
சந்தோச வாழ்வெல்லாம்
சாரமில்லாத சாபத்துள்
சறுக்கி விழுந்துவிட . . .
நடந்த பாதங்களின்
மறைந்த சுவடுகள்
நனைந்த விழிகளின்
கலைந்த கனவுகளாம் . . . . .

சிறகடித்த இதயங்கள்
சிறகொடிந்த பறவைகளாய்
சிறையில் கருகும்
சின்னஞ் சிறுமலர்கள் . . . .

ஊரெங்கும் சிதறும்
ஊழல் வேட்டுக்களாய்
உள்ளேயும் சில
உணர்வுப் புகைச்சல்கள் . . . . .

விடியலுக்கு இங்கே
பல சேவல்
பனி கொடுப்பு . . . .

பெட்டைக் கோழிகளும்
கூடிச் சிறகடிக்க
பல வர்ண
கட்சிக் கொடிகளை
காற்றின் கைகள்
பிடுங்கி வீசி விட
உச்சி வெய்யிலில்
உட்பாதம் கொப்பளிக்கின்றது . .

அதோ . . அதோ . . .
கண்ணில் தெரிவது
ஒற்றைக் கொடியின்கீழ்
படரும் நிழற் பரப்பு . . . . .

— காந்தன் —

☐ எந்நாள் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்

படிப்பகம்

www.padippakam.com

# பெண்களே பேதைகளே

என்
உயிருக்கு நெருங்கியவளே..!
சொர்க்கத்துக்கு
சிறகு விரிக்க
பிரியப்பட்டாயே....,
பின்..., எதற்காக
ஆறடி மண்ணுக்குள்
அமிழ்ந்து கொள்ள
அவசரப்பட்டாய்...?

அது என்ன
அனந்த சயனமா..?

உன்
கல்லறை ரோஜாவும்
கசங்கிப் போனதாக
கண்ணீர் வடிக்கின்றாயா..?

இல்லைப் பெண்ணே,
இல்லை..!

காலநிலை மாறிய
காற்றின் புழுதியால்
நீ
பலாத்காரத்திற்கு
பலி ஆடு.

மென்மையானவளே..!
எந்தக்
கலாச்சாரத்தின்
புராதன சுவடுகளை
புதுப்பித்துக் கொள்ள
சாக்கடைக் கொள்கைக்குள்
கால் சறுக்கினாய்...,?

எந்த இராமன்
உன்னை
தீக்குளிக்கச் சொன்னது..?

பேதையே — இது
இருபதாம் நூற்றாண்டு..!

பெண்களே — இது
இருபதாம் நூற்றாண்டு!

— யோகா —

## புதுச்சேதி

அன்று ஒருநாள்
தமிழகத்தின் கீழ்வெண்மணியில்,
ஏழைகளின் கறுப்புடல்கள்
கருக்கப்பட்ட சேதி கேட்டு
பதறி ஓடிவரும் கோடியலை;
சர்க்கரை மணலில்
அஞ்சலிக்கவி எழுதும்
நுரைப் பூக்கள்.

இன்று,
பனங்கூடல் சரசரப்பில்
பங்குனியின் உடல்தின்னும்
கொடுநெருப்பில்
ஜீப்புகள் தடதடத்து உறுமி
சப்பாத்துகளின் பேரொலியில்
தமிழ்முதுகுகள் கிழிந்து
மூர்ச்சையற்ற சேதிகேட்டு
விம்மி எழும் பேரலைகள்—
என்மனமாய்.

கரை ஓரம்
நிழல் பரப்பி,
களைத்துவிட்ட ஆலமரம்
பழைய இலையுதிர்த்து
பசிய தளிர்ப்பட்டுடுத்தி
சிவந்து பழுத்துக்கிடக்கிறது.
இவர்களுக்கு இது
இன்னுமேன் புரியவில்லை.

"அக்கரைக்கு போன அம்மாவுக்கு"
(கம்சத்வனி)

மண்ணில் இன்பங்களை விரும்பிச்
சுதந்திரத்தின் மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்
வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ?

படிப்பகம்

www.padippakam.com

ஆதிக்கக் கரங்களின்
இரும்புப் பிடிக்குள்
கண்ணீர் வடிக்கிறது
ஈழத்தின் தலைவிதி!

ஒரு
புதிய விடியலுக்காய்
அண்மையில் கேட்கிறது
துப்பாக்கிப் பூபாளம்!

மௌன இரைச்சலில்
மோனத் தவமிருக்கும்
இருள் முனிவனை,
பல
சேவலின் கூவல்கள்
நிட்டை கலைக்கும்!
யானைக் கூட்ட
முகிற் காட்டுக் கருமை
கழுவி
நிலவாளின் வீதியெங்கும்
குருதியையெடுத்து
சிவப்புக் கோலமிடும்
அந்த
புதிய புலர்வுக்காய்

உயிரை உருக்கும்
இளைய மெழுகு வர்த்திகள்...
அந்த விடுதலை வேள்வி
தானமாய் கொண்ட
அப்பாவி உயிர்கள் ......

பனித் தேசத்து
வசதிகளின் போர்வையில்
குளிர் காய்கின்ற
ஈழத்து வித்துகளே
எம்
மண்ணின் அவலங்களுக்கு
கை கொஞ்சம்
கொடுங்களேன்

—கஜன்—

படிப்பகம்

www.padippakam.com



ஓ...!

திலீபனே

மரணத்தை வென்றவனே...!

தமிழ் ஈழத்து

மணல் வெளிகளில்...,

கடற்கரைகளில்...,

வயல் வெளிகளில்...,

தழுவும் காற்றுக்களில்...,

சூரியக் கதிர்களில்...,

எங்கள் மனவெளிகளில்...

இங்கெல்லாம் உனது பெயர்

உச்சரிக்கப் படுகிறது.

ஏனெனில்

நீ

ஆதிக்க

முகத்திரை கிழித்துக்

காலத்தை வென்றவன்.

படிப்பகம்